28-01-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 28.11.1997

எல்லைக்கு அப்பாற்பட்ட சேவைக்கான சாதனம் - ஆன்மீக பர்ஸ்னா-ட்டி (ஆளுமைத்தன்மையின்) மூலம் பார்வையின் மூலம் திருப்திபடுத்துதல்

இன்று பாப்தாதா தனது கல்ப கல்பமாக சந்திக்கக்கூடிய செல்லமான, அன்பான குழந்தைகளை மீண்டும் சந்திப்பை கொண்டாட வந்திருக்கிறார். அவ்யக்த சந்திப்பு என்றாலே எப்பொழுதும் கொண்டாடிக் கொண்டே இருப்பதாகும். அவ்யக்த நிலையிலிருந்து ஸ்தூல ரூபத்தில் சந்திப்பை கொண்டாடுவதற்காக அனைத்து குழந்தைகளும் பாரதம் மற்றும் வெளி நாட்டிலிருந்து திரும்பவும் தனது வீட்டிற்கு வந்து அடைந்துள்ளீர்கள். நாலா பக்கத்திலும் இருக்கக் கூடிய குழந்தைகள் அவர் அவர்களின் இடத்தில் இருந்தும் கூட சந்திப்பை கொண்டாடிக் கொண்டி ருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சந்திப்பு ஆன்மீகமான அலௌகீகமான சந்திப்பாகும். இந்த சந்திப்பில் பாப்தாதா மற்றும் குழந்தைகளின் அன்பான ஸ்தூலமான சொரூபமாகும்.

இன்று பாப்தாதா தனது குழந்தைகளின் ஆன்மீக பர்ஸ்னாலிட்டி (ஆளுமைத்தன்மை) யை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தைகளின் மிகவும் உயர்ந்தாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஆன்மீக பர்ஸ்னாலிட்டி முழு கல்பத்திலும் வேறு யாருக்கும் இருப்பதில்லை. ஏனெனில் உங்கள் அனைவருடைய ஆளுமைத்தன்மையை (பர்ஸ்னாலிட்டியை) உருவாக்குபவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையாக இருக்கிறார். நீங்களும் கூட உங்களுடைய ஆன்மீக பர்ஸ்னாலிட்டியை தெரிந்திருக்கிறீர்கள் அல்லவா? அனைத்தையும் விட பெரியத்திலும் பெரிய பர்ஸ்னாலிட்டி - கனவிலும் கூட சம்பூரண தூய்மையின் பர்ஸ்னாலிட்டியாகும். நம்பர்வாராக தான் இருக்கிறது, ஆனாலும் நீங்கள் உலகத்திலுள்ள அனைத்து ஆத்மாக்களையும் விட உயர்ந்தவர் களாக இருக்கிறறீர்கள். எனவே பாப்தாதா ஒவ்வொருவரின் நெற்றியிலிருந்து பர்ஸ்னாலிட்டின் ஜொலிப்பை பார்த்துக் கொண்டிருக்கிறார். தூய்மையின் கூடவே அனைவரின் முகம் மற்றும் நடத்தையில் ஆன்மீகத் தன்மையின் ஜொலிப்பும் கூட இருக்கிறது. மேலும் பர்ஸ்னாலிட்டி என்றால் என்னவாக இருக்கிறது? யார் பொக்கிஷங்களில் (செல்ல செழிப்பு) நிறைந்தவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்கும் கூட பர்ஸ்னாலிட்டி இருக்கிறது. ஆனால் எவ்வளவு தான் செல்வ செழிப்பான ஆத்மாக்களாக இருந்தாலும் கூட, உங்களுக்கு முன்னால் உலகிய செல்வ செழிப்பான ஆத்மாக்கள் ஒன்றுமே கிடையாது. ஏனெனில் அவர்களும் கூட அழிவற்ற சுகம், சாந்தியின் பொக்கிஷத்தில் வெறுமையாக இருக்கிறார்கள். உங்களிடம் இருக்கக்கூடிய செல்வ செழிப்பிற்கு முன்னால் கோடிஸ்வரர்கள் - இலட்சாதிபதிகள் கூட பாபாவிடம் சுகம் சாந்தியை யாசிக்கக் கூடியவர் களாக இருக்கிறார்கள். மேலும் நீங்கள் சதா அழிவற்ற பொக்கிஷங்களில் நிரம்பியவர்களாக இருக்கிறீர்கள். அந்த (உலகிய) பொக்கிஷம் இன்று இருக்கும், நாளை இருக்காது. ஆனால் உங்களுடைய பொக்கிஷம் யாராலும் கொள்ளையடிக்க முடியாது. எந்தவொரு ஆத்மா வாலும் பொக்கிஷத்தை அசைக்க முடியாது. மேலும் வற்றாதது, தீராதது. அப்படிப்பட்ட

பர்ஸ்னாலிட்டியை உடையவர் நீங்களாக தான் இருக்கிறீர்கள். அனைத்தையும் விட உயர்ந்த திலும் உயர்ந்த பர்ஸ்னாலிடியுடன் இருப்பவர்கள் மனித ஆத்மாக்களின் மூலம், அழியக்கூடிய செல்வத்தின் மூலம், அழியக்கூடிய பதவியின் மூலம் பர்ஸ்னாலிட்டியானவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஆனால் நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பரமாத்மாவின் மூலம் சிரேஷ்ட பர்ஸ்னாலிட்டியை உடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள். எனவே தனது உயர்ந்த பர்ஸ்னாலிட்டி யின் ஆன்மீக நஷா இருக்கிறதா? இருக்கிறது என்றால் கையை அசையுங்கள்.

பாப்தாதாவிற்கு இப்படிப்பட்ட சிரேஷ்ட பர்ஸ்னாலிட்டியுடைய குழந்தைகளை பார்த்து மிகவும் குஷி அடைகிறார். உங்களுக்கும் கூட குஷி ஏற்படுகிறதா? பாப்தாதா குழந்தைகளின் இப்படிப்பட்ட உயர்ந்த தன்மையை பார்த்து என்ன பாடலை பாடுகிறார், தெரிந்திருக்கிறீர்களா? நீங்களும் பாடலை பாடுகிறீர்கள், பாபாவும் பாடுகிறார். தந்தை பாடும் பாடல் கேட்கிறதா? அல்லது டேப் ரீகார்ட்டில் (ஒலி பதிவு) பாடும் பாடல் கேட்கிறதா? பாப்தாதாவின் ஒலி நாடா (டேப் ரீகார்ட்) தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது அல்லவா, தானாகவே ஒலிக்கும். டேப் ரீகார்டை ஒலிபரப்பு செய்வதற்கான எந்த முயற்சியும் செய்ய வேண்டியிருக்காது. மேலும் மனதினுடைய பாடலை மனதில் இருக்க கூடியவர்களால் தான் கேட்க முடியும். காதுகள் மட்டும் இருக்கக் கூடியவர் களால் அல்ல, இதயம் இருக்கக் கூடியவர்களால் தான் கேட்க முடியும். எனவே அனைவரும் இதயம் இருக்கக் கூடியவர்கள் தான் அல்லவா. தில்வாலா கோவிலில் உங்களுடைய சித்திரமும் இருக்கிறது அல்லவா? அனைவரும் அவரவர்களின் சித்திரத்தை பார்த்தீர்களா? பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் சித்திரம் (மூர்த்தி) மற்றும் விசித்திரத்தை (ஆத்மாவை) பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனால் இன்று பர்ஸ்னாலிட்டியை பார்த்துக் கொண்டிருந்தார். எப்பொழுதுமே இந்த பர்ஸ்னாலிட்டியை நினைவில் கொண்டு வாருங்கள். இருக்கிறதா, இல்லையா என்பதே இல்லை. இருக்கிறது. தென்பட வேண்டும். அனுபவத்தில் வர வேண்டும். எப்பொழுதும் அப்படிப் பட்ட பர்ஸ்னாலிட்டியில் இருக்கக் கூடியவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? இது நம்முடைய பர்ஸ்னாலிட்டியில் இருக்கிறது என்பதை எந்த அடையாளத்தை வைத்து புரிந்து கொள்ளலாம்? ஒருவேளை இந்த ஆன்மீக பர்ஸ்னாலிட்டி வெளிப்படுகிறது என்றால் அவர்களின் கண்கள், அவர்களின் முகம், நடத்தை, எண்ணம் மற்றும் தொடர்பு அனைத்தும் மகிழ்ச்சி நிறைந்தாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பது, கேள்விகுறியுடன் இருப்பதல்ல. மகிழ்ச்சியாக இருப்பது. ஒருவேளை கேள்விகளுடன் இருக்கிறார்கள் என்றால் பர்ஸ்னாலிட்டியுடன் இருப்பவர் கள் கிடையாது., முகத்திலும் மகிழ்ச்சியின் ஜொலிப்பு இருக்காது. எது நடந்தாலும் சரி, பர்ஸ்னாலிட்டியுடன் இருப்பவர்களின் மகிழ்ச்சியை மறைக்க முடியாது. காணாமலும் போகாது. மகிழ்ச்சியான ஆத்மாக்கள் எப்படிப்பட்ட கவலை நிறைந்த ஆத்மாக்களாக, அசாந்தியான ஆத்மா வாக இருந்தாலும், அவர்களுக்கு தனது மகிழ்ச்சியான பார்வையினால் மகிழ்ச்சியை (திருப்தியை) ஏற்படுத்தக் கூடியவர், இதை செய்வது பாபா மட்டும் அல்ல, உங்களுக்கும் இந்த மகிமை இருக்கிறது. மேலும் இப்பொழுது நேரத்திற்கு தகுந்தவாறு எந்தளவு நேரம் அருகாமையில் நெருங்கி வந்துக் கொண்டிருப்பதால், பார்வையின் மூலம் திருப்திப் படுத்தும் சேவை செய்வதற் கான நேரம் வந்துவிட்டது. 

நாட்களுக்கான கோர்ஸ் எடுக்க வேண்டியிருக்காது. ஒரே ஒரு பார்வையின் மூலம் மகிழ்ச்சியடைந்து விடுவார்கள். மனதினுடைய ஆசைகள் உங்கள் மூலம் நிறைவேறிவிடும். எனவே அனைவரும் என்ன புரிந்திரிகிறீர்கள்? ஆரம்பத்திலிருந்தே சேவை செய்யும் இரத்தினங்கள் என்ன புரிந்துள்ளீர்கள்? அப்படிப்பட்ட சேவை செய்ய முடியுமல்லவா?

இப்பொழுது பாருங்கள் நீங்கள் அனைவரும் 40 வருடங்கள் சேவை செய்துள்ளீர்கள் மற்றும் அதிகமாகவும் செய்திருப்பீர்கள். ஒரு சிலருக்கு ஒன்று இரண்டு வருடம் குறைவாகவும் இருக்கும், சிலருக்கு அதிகமாகவும் இருக்கும். இப்பொழுது நீங்கள் உங்களுடன் இருப்பவர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளீர்கள், மேலும் நிமித்தமாகவும் மாற்றியுள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்த சேவையை அவர்களும் செய்துக் கொண்டி ருக்கிறீர்கள். ஆதி இரத்தினமாக இருக்கக் கூடிய நீங்கள் விடுப்பட்டவராகவும், அன்பானவராகவும் இருந்து சேவை செய்கிறீர்கள் அல்லவா? பார்வையின் மூலம் எந்தளவு செதிருக்கிறீர்கள் என்பதற்கான உற்சவம் கொண்டாடு வீர்கள். 9 இலட்சத்தில் எத்தனை பேர் உருவாக்கியிருக்கிறீர்கள்? 33 கோடி பேர் முன்னால் 9 இலட்சம் எனபது ஒன்றுமே இல்லை. விதையை இங்கு தான் போட வேண்டு மல்லவா? ஆதி இரத்தினங்கள் சேவையில் இப்பொழுது மேலும் என்ன அதிசயம் காட்டுவீர்கள். இந்த அதிசயத்தை செய்து காட்டிவிட்டீர்கள், சேவை நிலையங்கள் உருவாக்கினீர்கள், நல்ல நல்ல சேவை திட்டங்கள் செயல் படுத்தினீர்கள். இவை அனைத்திற்கும் பலமடங்கு வாழ்த்துக்கள். இரண்டு விதமான குழந்தைகள் இருக்கிறார்கள், யார் முதல் விதமானவர்கள் ஸ்தாபனைக்கு நிமித்தமானவர் களாகவும், மேலும் விசேஷமான சேவைக்கான ஆதி இரத்தினங்கள். இவர்கள் (தாதி மார்கள்) வேர் பகுதியை சேவையை ஸ்தாபனை செய்யக் கூடியவர்களாகவும், நீங்கள் அனைவரும் (சேவைகான ஆதிரத்தினம்) முதன்மையான தண்டு பகுதியாக இருக்கிறீர்கள், எனவே தண்டு பகுதி உறுதியாக இருக்கிறதல்லவா. தண்டு பகுதியில் தான் அனைத்து ஆதாரமும் இருக்கிறது. தண்டு பகுதியிலிருந்து தான் அனைத்து கிளைகளும் வெளிவருகிறது. வேர் பகுதியில் இருப்பவர்கள் சூட்சமத்தில் சக்தியை கொடுக்கிறார்கள், ஆனால் யார் நடைமுறையில் இருக்கிறார்கள், அவர்கள் தென்படுகிறார்கள், தண்டு பகுதி தான் தென்படுகிறது. அதனால் தாதிமார்கள் இப்பொழுது குப்தமாக ஆகிவிட்டார்கள். சகாஷ் (சக்தி) கொடுக்கக் கூடியவர்கள், மேலும் நடைமுறையில் மேடைக்கு வருவதற்கு நீங்கள் நிமித்தமாகி இருக்கிறீர்கள், (சம்மான் சமாரோ - பாராட்டு விழாவிற்கு வந்திருக்கக் கூடிய அனைத்து மூத்த சகோதரிகளையும் பாப்தாதா கைகளை உயர்த்த வைத்தார்) ஆகையால் பாப்தாதா வேலையை (சேவை) கொடுத்துக் கொண்டிருக்கிறார். பாராட்டு விழா மிக நன்றாக கொண்டாடினீர்கள் அல்லவா. பாப்தாதா அனைத்தையும் பார்தார், அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகளை பார்த்தார், அந்த நேரத்தில் நாங்கள் சைதன்யமான மூர்த்தி என்ற ஆன்மீக அனுபவம் செய்துக் கொண்டிருந்தீர்கள். அலங்கரிக்கப்பட்ட மூர்த்திகள் கோவிலிருந்து சாந்திவனம் வந்தடைந்தை போல் தோன்றியது.

எனவே இப்பொழுது வேகமாக சேவையை ஆரம்பம் செய்யுங்கள் என்பதை தான் குழந்தைகளிடம் பாப்தாதா விரும்புகிறார். என்ன நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. இப்பொழுது மற்றவர்களுக்கு அதிகப்படி யான

வார்த்தைகளுக்கான வாய்ப்பை கொடுங்கள். இப்பொழுது மற்றவர்களையும் மைக்காக உருவாக்குங்கள். நீங்கள் மைட் (சக்திசாலியானவர்) ஆகி சகாஷ் கொடுங்கள். எனவே உங்களின் சகாஷ் மேலும் அவர்களின் வார்த்தைகளுக்கு இரட்டிப்பு வேலை செய்யும். அப்பொழுது தான் 9 இலட்சம் நபர்கள் எளிதாகவே ஆகிவிடு வார்கள், இப்பொழுது நீங்கள் அனைவரும் ஏதாவது நிகழ்ச்சியில் அமர்ந்திருந்தாலும் சரி, மேலும் மற்ற மகாரதிகள் அமர்ந்திருந்தாலும் சரி, மகாரதி களின் தற்பொழுதிய சேவை - அனைவருக்கும் சகாஷ் கொடுப்பதாகும். எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையின் மைதானத்திற்கு வாருங்கள். பாபா அவ்யக்த வதனத்தில், ஒரே இடத்தில் அமர்ந்துக் கொண்டு நாலா பக்கத்திலுமுள்ள உலகத்தில் இருக்கும் குழந்தைகளை பாலனை செய்ய முடிகிறது. செய்துக் கொண்டு இருக்கிறார் என்றால் நீங்களும் கூட ஒரே இடத்தில் அமர்ந்துக் கொண்டு பாபாவிற்கு சமமாக எல்லைக்கு அப்பாற்பட்ட செய்ய முடியாதா என்ன? ஆதி இரத்தினம் என்றால் ஃபாலோ பாதர் (தந்தையை பின்பற்றுவது) எல்லைக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து சகாஷ் கொடுங்கள். எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் எப்பொழுது வரும் ? என்பதை பல குழந்தைகள் தன்னிடமே கேட்டுக் கொள்கிறார்கள், மற்றும் மற்றவர்களும் உங்களிடமும் கேட்கிறார்கள். தென்படவே இல்லை என்றாலும், எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் தன்னை பிஸியாக வைத்துக் கொண்டால் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் தானாகவே வந்துவிடும், ஏனெனில் இந்த சகாஷ் கொடுப்பதற்கான சேவை நிரந்தரமாக செய்ய முடியும், இதில் ஆரோக்கியத்திற்கான விஷயம், நேரத்தின் விஷயம், - இவை அனைத்தும் எளிதாகிவிடும். இரவும் பகலும் இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் ஈடுபட முடியும். பிரம்மா பாபாவை பாருங்கள் இரவிலும் கூட கண்கள் திறந்துக் கொண்ட நிலையில் எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையை செய்துக் கொண்டிருந்தார். எனவே இந்த எல்லைக்கு அபாற்பட்ட சேவையில் பிஸியாக செய்துக் கொண்டிருந்தால், அது எல்ல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் தானாகவே இதயத்திற்குள் வந்துவிடும். திட்டமிடுதலினால் அல்ல. இது செய்ய வேண்டும், அதை செய்ய வேண்டும் போன்ற திட்டங்களை உருவாக்குகிறீர்கள், ஆனால் எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் பிஸியாக இருக்க வேண்டும், இது தான் அனைத்தையும் விட எளிதான சாதனமாகும். ஏனெனில் எல்லைக்கு அபபற்பட்ட நிலையில் சகாஷ் கொடுதீர்கள் என்றால், அருகாமையில் இருப்பவர்களுக்கு தானாகவே சகாஷ் சென்றடைந்து விடும். இத்தனை கிளை நிலையங்களின் பொறுப்பு இருக்கிறது, ஜோனின் பொறுப்பு இருக்கிறது இதைப்பற்றி இப்பொழுது சிந்தனை செயாதீர்கள், நீங்கள் அனைவரும் ஏதாவதொரு மாநிலத்திற்கு இராஜாவாக ஆக போகிறீர்களா, அல்லது உலகத்திற்கு இராஜாவாக போகிறீர்களா? என்ன ஆக வேண்டும்? உலகத்திற்கு தான் இரஜா ஆக வேண்டு மல்லவா? ஆதிரத்தினம் என்றால் உலகத்திற்கு உலகத்திற்கு சகாஷ் கொடுக்கக் கூடியவர் ஆகுங்கள். ஒருவேளை 20 செண்டர், 30 செண்டர், அல்லது 250 செண்டர் அல்லது ஜோன் , இவை யெல்லாம் புத்தியில் இருக்கிறது என்றால், இவை தண்டு பகுதியின் வேலை அல்ல. இவற்றை கிளைகள் கூட செய்ய முடியும். நீங்கள் தண்டு பகுதியை சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். கிளை பகுதியிலிருந்து தான் அனைவருக்கும் சகாஷ் செல்கிறது. நீங்கள் அனைவரும் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் வர வேண்டும் என்று யோசிக்கிறீர்கள். இது மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது விநாசம் ஆகி விட வேண்டுமென்று நினைக்கிறீர்கள், ஆனால் 9 இலட்சம் தயார்

ஆகவில்லையென்றால், சத்யுகத்தின் ஆரம்பத்தில் வருவதற்கான எண்ணிக்கை உருவாகாமல் விநாசம் ஆகிவிட்டால் யார் வருவார்கள்? 2-3 ஆயிரம் நபர்கள் மீது ஆட்சி செய்வார்களா? 4-5 இலட்சம் நபர்கள் மீது ஆட்சி செய்வார்களா என்ன? ஆகையால் எல்லைக்கு அப்பாற்பட்ட சேவைகான பார்ட்டை ஆரம்பம் செய்யுங்கள். பாண்டவர்கள் என்ன புரிந்துள்ளீர்கள்? எல்லைக்கு அப்பாற்பட்ட சேவை செய்வீர்கள் அல்லவா? பாண்டர்கள் தயாரா? இப்பொழுது இந்த எல்லைக்குட்ட விஷயங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் செல்வதினால் தான் தானாகவே விடுப்பட்டு போய்விடும். விடுவதின் மூலம் தான் விடுபடும். எல்லைக்கு அப்பாற்பட்ட சகாஷ் கொடுப்பதினால் மாற்றம் அடைவது தான் தீவிர சேவைக்கான ரிசல்ட்டாகும்.

இக்கட்டான சூழ்நிலையில் நிமித்தமாக உள்ள ஆத்மாக்களின் சேவையின் வெளிப்படையாக ஆதாரமாக இருந்தார்கள் என்பதை பாப்தாதாவிற்கு தெரிந்திருக்கிறார். ஆனால் உங்கள் அனைவரின் அஸ்திவாரம் மற்றும் நொடி பொழுதின் மாற்றத்திற்கான முக்கியமான அனுபவம் - பிரம்மாபாபாவை பார்த்தீர்கள் மேலும் பிராமணன் ஆகிவிட்டீர்கள். சேவைக்கான ஆசீர்வாதம் கிடைத்தது மற்றும் சேவையில் ஈடுபட்டுவிட்டீர்கள். பாப்தாதா அனைவருடைய அனுபவத்தையும் கேட்டிருக்கிறார். நல்ல அனுபவம் சொன்னீர்கள். அதனால் எப்படி உங்களுக்கு அனுபவம் இருக்கிறது, பிரம்மா பாபாவை பார்த்தீர்கள், மேலும் யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. பொறுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே அனுபவம் ஆகாமல் இருந்தது. பெரிய விஷய மாகவே இல்லை. அதுபோல இப்பொழுது ஒவ்வொரு பிராமண ஆத்மாவையும் பாருங்கள், மேலும் ஆத்மாவில் (பிராமண ஆத்மாவிற்குள்) பிரம்மாவை பாருங்கள். இது தான் சேவைக்கான விரைவான சாதனமாகும், பிரம்மா பாபா உங்களுக்கு கோர்ஸ் எடுத்தாரா என்ன? கோர்ஸ் அனைத்தும் பிறகு தான் எடுத்துக் கொண்டீர்கள் . ஆனால் பார்த்தீர்கள், மேலும் ஆகிவிட்டீர்கள். அதனால் எப்படி பிரம்மாவிற்குள் (சிவ) பாபா இருந்தார், ஆகையால் முயற்சி தேவைப்படவில்லை, அதுபோல நீங்கள் அனைவரும் கூட பாப்தாதாவை தனக்குள் உள்வாங்கி பார்வையினால் திருப்திபடுத்துங்கள். இவை உங்களுக்கு அனுபவம் இருக்கிறது, அனுபவசாலிகளாக இருக்கிறீர்கள். பார்த்தீர்கள் மற்றும் அர்ப்பணம் ஆகிவிட்டீர்கள். எப்படி இப்பொழுது யோசிக்கிறார்கள். டிரனிங் எடுத்துக் கொள்கிறார்கள், டிரைலில் வருகிறார்கள். அதன் பிறகு சிலர் சென்றுவிடுகிறார்கள், சிலர் இருந்துவிடுகிறார்கள். இந்தளவு உழைப்பு நீங்கள் செய்தீர்களா? டிரனிங் எடுத்துக் கொண்டிர்களா என்ன? டிரைலில் இருந்தீர்களா என்ன? வந்தீர்கள், சரணடைந்து விட்டீர்கள். அப்படிப்பட்ட சேவையை ஒரு பிரம்மா பாபாவால் செய்ய முடிந்தது என்றால் இத்தனை பிராமண ஆத்மாக்களாகிய உங்களால் செய்ய முடியாதா என்ன? உங்களுடைய பர்ஸ்னாலிட்டியை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். பிரம்மாவின் பர்ஸ்னாலிட்டியும் கூட இருக்கிறதல்லவா? தோற்றத் திலோ, குணத்தில் இருந்தாலும் சரி ஆளுமைத்தன்மை (பர்ஸ்னாலிட்டி) இருந்தது, அதனால் தான் ஈர்க்கப்பட்டீர்கள். எனவே பிரம்மா பாபாவை பின்பற்றுங்கள். பாபா உங்களை ஆரம்பத்தில் நிமித்தமாக (பொறுப்பானவராக) மாற்றி இருக்கிறார், அதனால் ஆரம்பத்தில் இருந்தவர்கள், சேவைக்கு நிமித்தமானவர்கள் மற்றும் ஸ்தாபனைக்கு அஸ்திவாரமாக இருந்தவர் கள், கடைசி வரை சேவையில் இருக்க வேண்டும். ஆரோக்கிய குறைபாடு

காரணத்தினால் உடல் மூலம் சென்று வர முடியாது, ஆனால் மனதின் மூலம் சுற்றி வர முடியுமல்லவா? இதில் எந்தவிதமான செலவும் இல்லை, விசா (பாஸ்போர்ட்) எடுப்பதற்கான அவசியமும் இல்லை. அவசர அவசரமாக ஓடி செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. சாய்வாக அமர்ந்துக் கொண்டும் செய்ய முடியும். என்ன புரிந்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்பொழுது அதுபோல ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள். புது பாடத்தை ஆரம்பம் செய்யுங்கள். இப்பொழுது தான் ஒரு விழாவை கொண்டாடி விட்டீர்கள் அல்லவா. சேவை செய்ததற்கான உடனடி பலன் கிடைத்து விட்டது. இப்பொழுது புதுமையான சேவையை செய்யுங்கள். நல்லது.

பாப்தாதா அருகாமையில் இருப்பவர்களுக்கு மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பது இல்லை, அனைத்து குழந்தைகளுக்கும் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். வெளிநாட்டில் இருந்து யாரெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். எங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்தாலும் சரி, சாந்திவனத்தில் கேட்டுக் கொண்டிருந்தாலும் சரி, மேலுள்ள பாண்டபவனில், வெளிநாட்டிலிருந்துக் கொண்டு, எங்குகிருந்தாலும் சரி பாப்தாதா அனைவருக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரி ஆகுங்கள். நேரத்தை எல்லைக்கு அபாற்பட்ட சேவையில் ஈடுபடுத்துங்கள். எல்லைக்கு அப்பாற் பட்ட சேவையில் நேரத்தை ஈடுபடுத்துவதினால் பிரச்சனை எளிதாகவே ஓடிவிடும். ஏனெனில் அஞ்ஞானியாக இருந்தாலும் சரி, பிராமண ஆத்மாக்களாக இருந்தாலும் சரி, ஒருவேளை பிரச்சனை யில் நேரத்தை செலவிடு கிறார்கள் அல்லது மற்றவர்களின் நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால் பலவீனமான ஆத்மாக்கள் என்று நிரூபணம் ஆகிறது, தன்னிடம் சக்தியற்றவராக இருக்கிறார்கள். யாரிடம் சக்தி இல்லையோ, கால்கள் ஊனமுடையதாக மேலும் நீங்கள் ஓடு என்றால், ஓடுவார்கள் அல்லது விழுந்து விடுவார்களா? எனவே பிரச்சனைகளுக்கு வசப்பட்ட ஆத்மாக்கள் பிராமணர்களாகவும் இருக்கிறார்கள், ஆனால் பலவீனமாக இருக்கிறார்கள், சக்தி இல்லாமலும் இருக்கிறார்கள், எனவே அவர்களுக்கு எங்கிருந்து சக்தி வரும்? பாபாவிடமிருந்து நேரடியாக சக்தியை எடுக்க முடியாது. ஏனெனில் ஆத்மா பலவீனமாக இருக்கிறது. எனவே என்ன செய்வார்கள்? பலவீன மான ஆத்மாக்களுக்கு மற்றவர்கள் யாராவது இரத்ததை கொடுத்து வலிமையுடையவர்களாக மாற்றுகிறது. சிலர் சக்திசாலியான ஊசியை போட்டு வலிமையை கொண்டு வருகிறார்கள், எனவே உங்கள் அனைவரிடத்திலும் சக்தி இருக்கிறது. எனவே சக்திக்கான உதவியை கொடுங்கள், குணத்தின் உதவியை கொடுங்கள். அவர்களிடம் அது (சக்தி) இல்லை, தன்னுடையதை கொடுங்கள். ஏற்கனவே சொல்லியிருந்தேன் அல்லவா, வள்ளலாக இருங்கள். அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு சக்தியை கொடுங்கள். குணம் மற்றும் சக்தியின் உதவியை கொடுப்பதின் மூலம் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும், மேலும் ஆசீர்வாதம் லிப்டைவிட வேகமான ராக்கேட் ஆகும். உங்களுக்கு முயற்சியில் நேரத்தை கொடுக்க வேண்டியிருக்காது. ஆசீர்வாதங்களின் ராக்கேட் மூலம் பறந்துக் கொண்டே இருப்பார்கள். முயற்சியின் உழைப்பிற்கு பதிலாக சங்கமயுகத்தின் பாக்கியத்தை அனுபவம் செய்வார்கள். ஆசீர்வாதங்களை பெறுவது - அதை கற்றுக் கொள்ளுங்கள், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள். தனது இயல்பான கவனம் மற்றும்

ஆசீர்வாதம், கவனத்தில் எந்தவிதமான டென்சனையும் கலக்க வேண்டாம், இயல்பாக இருக்க வேண்டும். ஞானத்தின் கண்ணாடி சதா முன்னாலே இருக்கிறது. அதில் தானாகவே எளிதாக தனது சித்திரம் தென்பட்டுக் கொண்டே இருக்கும். ஆகையால் பர்ஸ்னாலிட்டின் அடையாளம் மகிழ்ச்சியாக இருப்பது. இந்த ஏன், என்ன, எப்படி? - இந்த கேள்வி குறியின் மொழியை முடித்துவிடுவது. ஆசீர்வாதங்கள் பெறுவது மற்றும் கொடுப்பதை கற்றுக் கொடுங்கள். மகிழ்ச்சியாக இருப்பது, மற்றவர்களையும் மகிழ வைப்பது - இது தான் ஆசீர்வாதங் களை கொடுப்பது மற்றும் ஆசீர்வாதங்களை பெறுவதாகும். எப்படிப் பட்டவராக இருந்தாலும் சரி , உங்களின் மனதிலிருந்து ஒவ்வொரு ஆத்மாவின் மீதும், ஒவ்வொரு நேரமும் ஆசீர்வாதங்கள் தான் வெளி வரவேண்டும் - இவர்களுக்கும் நன்மை ஏற்படவேண்டும். இதற்கும் கூட புத்தி அமைதியாக இருக்க வேண்டும். இவர்கள் அப்படி, இவர்கள் இப்படி - இதுபோல அல்ல. அனைத்தும் நன்றாகவே இருக்கிறது. இவ்வாறு இருக்க முடியுமா? ஆசீர்வாதங்கள் கொடுக்க வருகிறதா? பெறுவதற்கு வருகிறது, கொடுக்க வருகிறதா? கொடுக்க இல்லையென்றால் எப்படி எடுக்க முடியும்? கொடுங்கள், பெறுங்கள். இவர்கள் செய்ய வில்லையென்றால், நான் செய்கிறேன். பிரம்மா பாபாவின் சுலோகன், பிரம்மா பாபா அடிக்கடி நினைவு கொடுத்துக் கொண்டிருக்கிறார் - எந்தவொரு செயலை நான் செய்கிறேனோ, என்னை பார்த்து மற்றவர்களும் கூட செய்வார்கள். மற்றவர்கள் செய்தால் நான் செய்கிறேன் .. இந்த சுலோகன் அல்ல. எதை நான் செய்கிறேனோ என்னை பார்த்து மற்றவர்கள் செய்கிறார்கள். இல்லையென்றால் சுலோகனை மாற்றி விடுங்கள். மேலும் ஜகதம்பா வின் விசேஷமான சுலோகன் - செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். அவர் நடத்திக் கொண்டிருக்கிறார். நாம் நிமித்தமாக இருந்து நடந்துக் கொண்டிருக்கிறோம். எனவே இரண்டு சுலோகனையும் சதா நினைவில் வையுங்கள், வெளிக் கொணருங்கள். இருக்கிறதா, கேட்கிறீர்களா, நினைவு இருக்கிறது... ஆனால் இல்லை. செயலில் தென்படச் செய்யுங்கள். எனவே என்ன செய்வீர்கள்? நிந்தனை செய்வது, வருத்தப்படுவது, இவர்கள் இப்படி, இவர்கள் அப்படி அல்ல, ஆசீர்வாதங்களை பெறுங்கள், ஆசீர்வாதங்களை கொடுங்கள்.அவர்களுக்கு ஆசீர்வாதம் கொடுங்கள். பலவீனமாக இருக்கிறார்கள், வசப்பட்டு இருக்கிறார்கள், வார்த்தைகள் மற்றும் எண்ணங்களை மாற்றுங்கள். இவர்கள் மாறட்டும் என்பது எண்ணத்தில் கூட வரக்கூடாது, என்னை மாற்றிக் கொள்கிறேன். மற்ற விஷயங்களின் நான்.. நான் ..என்று வருகிறது அல்லவா, ஆனால் எந்த விஷயத்தில் நான் வர வேண்டும், அதில் மேலும் செய்ய முடிந்தால் செய்யுங்கள் இதில் என்ன இருக்கிறது? நன்றாக ஒரு செயல் முடிந்தால் நான் என்று சொல்கிறீர்கள். வேறு மாதிரி ஏதாவது செயல் நடந்து விட்டால், இவர்கள் செய்தார்கள், இவர்கள் சொன்னார்கள் என்று சொல்கிறீர்கள். தலைகீழாக மாறிவிட்டது அல்லவா. யார் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும், நான் என்ன செய்ய வேண்டும், நான் யோசிக்க வேண்டும், நான் என்ன சொல்ல வேண்டும், இதில் நான் என்ற தன்மையை கொண்டு வாருங்கள். உடல் உணர்வினுடைய நான் அல்ல. சேவையில் நான். எனவே அதுபோல சிரேஷ்ட வைப்ரேஷனை பரப்புங்கள். இப்பொழுது வார்த்தைகள் குறைவான சேவைத் தான் செய்கிறது. மனதினுடைய உதவி, இதயத்தின் வைப்ரேஷன் மிக விரைவாக செய்ய முடிகிறது. நல்லது.

இப்பொழுது ஒரு நிமிடத்தில் அனைவரும் அமைதியின் சக்தியை வெளிப்படுத்துங்கள். மிகுந்த ஆழ்ந்த அமைதியை மனதின் மூலம், உடலினால் வெளிப்படுத்துங்கள். (பாப்தாதா ஆழ்ந்த அமைதியை டிரில் செய்ய வைத்தார்).

நல்லது நாலா பக்கத்திலுமுள்ள அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு சதா ஆன்மீக பர்ஸ்னாலிட் டின் மகிழ்ச்சியில் இருக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, சதா எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையில் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ளக் கூடிய நிமித்தமான உலகத்திற்கு நன்மை செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மா பாபா மற்றும் ஜகத்தம்பாவின் சுலோகனை நடைமுறையில் கொண்டு வரக்கூடிய, உயர்ந்ததிலும் உயர்ந்த பார்வையினால் அனைவரையும் திருப்திபடுத்தக் கூடிய சேவையில் எப்பொழுதும் இருக்கக் கூடிய பாபாவிற்கு சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதா மற்றும் ஜகத்தம்பா அம்மாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : சுயநலத்திலிருந்து விடுபட்டவராகவும் தொடர்பில் அன்பானவராகி சேவை செய்யக்கூடிய உண்மையான சேவாதாரி ஆகுக.

எந்த சேவையில் தானும் தொந்தரவுக்கு உட்பட்டு மற்றவர்களையும் தொந்தரவுக்கு உட்படுத்துவது என்பது சேவை அல்ல, அது சுயநலமாகும். ஏதாவது சுயநலத்தோடு செய்யும் பொழுது தான் மேலும் கீழும் ஆகிவிடுகிறது. தனக்கோ அல்லது மற்றவர்களின் சுயநலம் பூர்த்தி அடைய வில்லையென்றால் சேவையில் தொந்தரவு ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால் சுயநலத்திலிருந்து விடுபட்டவராகவும், அனைவருடைய தொடர்பில் அன்பானவராகி சேவை செய்யும் பொழுது தான் உண்மையான சேவாதாரி என்று சொல்ல முடியும். சேவையை மிக நன்றாக ஊக்க உற்சாகத்தோடு செய்யுங்கள், ஆனால் சேவையின் சுமை ஸ்திதியை (மனநிலை) ஒருபொழுதும் மேலும் கீழுமாக செய்து விடக்கூடாது. இதில் கவனம் வையுங்கள்.

சுலோகன்: நல்ல மற்றும் உயர்ந்த வைப்ரேஷன் மூலம் எதிர்மறையானகாட்சியையும் நேர்மறையாக மாற்றிவிடுங்கள்.

அவ்யக்த அமைதியின் மூலம் டபுள் லைட் பரிஸ்தாவின் மனநிலையை அனுபவம் செய்யுங்கள்.

செய்பவர் செய்விப்பவர் பாபாவாக இருக்கிறார், செய்யக் கூடியவர் அனைத்தையும் செய்துக் கொண்டிருக்கிறார், நான் நிமித்தமானவராகி செய்துக் கொண்டிருக்கிறேன். இந்த நினைவின் மூலம் செய்கிறேன் என்ற உணர்வை சமாப்தி செய்து விடுபட்டவராகவும் அன்பானவராகவும் ஆகுங்கள். அனைத்து சுமைகளையும் பாபாவிற்கு முன்னால் சமர்ப்பணம் செய்து தனது அநாதி சொரூபத்தின் நினைவு மூலம் அநாதி சுபாவம் சம்ஸ்காரத்தை தாரணை செய்து டபுல் லைட் ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள்.